2010 ஏப்ரல் 19]

55—

கட்டட வசதி

***109044—திரு. சி. துரைராஜ்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேடப்பட்டி தொகுதி, எழுமலை பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எழுமலை சார் பதிவகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்கென எழுமலை கிராமம் சர்வே எண் 559/4G-ல் 2,820 சதுரடி தனியார் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுக் கட்டடம் கட்ட நிலம் தயாராக இருப்பதால் நிதி நிலைமை அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும், அரசுக் கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியிலுள்ள, எழுமலை பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்கப்பட்டு, சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தின்மூலம் அரசாங்கத்திற்கு முத்திரைத் தாள் விற்பனை மற்றும் பதிவுக் கட்டணம்மூலம் அதிகப்படியான வருமானமும் வருகிறது. இந்த அலுவலகத்தின்மூலம் சுமார் 100-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். போதுமான இட வசதியும் அரசுக்குச் சொந்தமான இடமும் இருக்கிறது. எனவே, மதுரை மாவட்டத்திலுள்ள எழுமலை பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு இந்த நிதியாண்டில் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுமலை சார் பதிவாளர் அலுவலகக் கட்டடத்தைப் பொறுத்தமட்டில், பழைமைவாய்ந்த கட்டடமாக இருக்கிறது என்று உறுப்பினர் தெரிவித்தார். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் தமிழகத்திலிருக்கக்கூடிய வாடகைக் கட்டடங்களெல்லாம் சொந்தக் கட்டடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. நான்காண்டுக் காலத்தில், சுமார் 45 வாடகைக் கட்டடங்கள் சொந்தக் கட்டடங்களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அதே நேரத்தில் பழைமை வாய்ந்த கட்டடமாக இருப்பதால், முன்னுரிமையின் அடிப்படையிலும், அந்தப் பதிவு அலுவலகத்தில் செய்யப்படும் பதிவுகளையும் கணக்கில் கொண்டு வருங்காலத்தில் புதிய கட்டடம் கட்டப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுமலையில் இதுவரை வாடகைக் கட்டடத்தில்தான் இந்த அலுவலகம் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், பெரிய ஊர்களான உசிலம்பட்டி, சிந்துபட்டி, எழுமலை போன்ற அதிக வருவாய் வரக்கூடிய ஊர்களிலே அமைந்துள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லை. இதிலே உசிலம்பட்டியில்கூட பத்திரப் பதிவு அலுவலகமும் தாலுகா அலுவலகமும் அருகருகிலே இருக்கின்றன. மேலும், அந்த அலுவலகம் தேசிய நெடுஞ்சாலையின் அருகிலே இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. எனவே, உசிலம்பட்டி, சிந்துபட்டி மற்றும் எழுமலை ஆகிய ஊர்களிலே செயல்பட்டு வருகின்ற பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் இருக்கக்கூடிய சார்பதிவு அலுவலகங்களுக்கு, வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய அந்த அலுவலகங்களுக்கு, புதிய சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று, ஆண்டுதோறும் அதற்காக நம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை கட்டப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-00

இதுவரையில் 45 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்திற்காக சுமார் 8.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோன்று 6 ஒருங்கிணைந்த வளாகங்கள் கட்டுவதற்காக சுமார் 10 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நிச்சயமாக, வருங்காலத்தில், படிப்படியாக சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணங்களைப் பதிவு செய்யக்கூடிய எண்ணிக்கைகளைப் பொறுத்தும், பழைமை வாய்ந்த கட்டடங்கள் என்ற அந்த அடிப்படையை மனதிலே வைத்துக்கொண்டும் கலைஞருடைய ஆட்சியைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இருக்கக்கூடிய சார்பதிவாளர் அலுவலகங்கள் எல்லாம் சொந்தக் கட்டடங்களாக மாற்றப்படும். எனவே, வருங்காலத்தில் நிச்சயமாக அங்கும் கட்டப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

நெசவுப் பூங்கா

***106294—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டுத் தொகுதியில் நெசவுப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?